## நிகழ்ச்சி நிரல்

| நாள் | நேரம் | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| மாசி மாதம் 16ஆம் நாள் 28-02-2024 புதன்கிழமை | மாலை 5.00 மணிமுதல் | பகவத் ப்ரார்த்தனை, யஜமான சங்கல்பம், விஷ்வக்ஸேன ஆராதனம், புண்யாஹவாசனம், ம்ருத்சங்க்ரஹணம் ஸோமகும்ப ஸதாபநம் பாலிகா ஆராதனம், அங்குரஹோமம் வேதப்ரபந்த தொடக்கம். |
| மாசி மாதம் 17ஆம் நாள் 29-02-2024 வியாழக்கிழமை | காலை 6.00 மணிமுதல் (முதல் காலம்) | வாஸ்து ஹோமம், ரக்ஷாபந்தனம், யாகசாலை ப்ரவேசம், த்வாரபூஜை மஹா கும்பஸ்தாபனம், மண்டல ஆராதனம், பகவத் ஆராதனம், ஹோமம், பூர்ணாஹூதி, சாற்றுமறை, தீர்த்த ப்ரசாத விநியோகம் |
| | மாலை 5.00 மணிமுதல் (இரண்டாம் காலம்) | விசேஷ திருமஞ்ஜனம் (17 கலச ஸ்தபன திருமஞ்ஜனம்) |
| | மாலை 7.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை | சதுஸ்தான அர்ச்சனம், மூலமந்த்ர, முக்யமந்த்ர ஹோமம், ஸாந்தி ஹோமம், பூர்ணாஹூதி, சாற்றுமறை, தீர்த்த ப்ரசாத விநியோகம் |
| | இரவு 9.00 மணிக்கு | சயனாதி வாஸம் |
| மாசி மாதம் 18ஆம் நாள் 01-03-2024 வெள்ளிக்கிழமை | காலை 5.00 மணிக்கு | சுப்ரபாதம், விஸ்வரூபம், சதுஸ்தான அர்ச்சனம், ஹோமம், ப்ராயசித்த ஹோமம், |
| | காலை 7.00 மணிமுதல் 7.30 மணிக்குள் | மஹா பூர்ணாஹூதி யாத்ராதானம், கும்ப புறப்பாடு |
| | காலை 7.30 மணிமுதல் 9.00 மணிக்குள் | விமானம், மூலவர், உற்சவர் **மஹா ஸம்ப்ரோக்ஷணம்,** விசேஷ ஆராதனம், மந்த்ர புஷ்பம், மஹா நைவேத்யம், சாற்றுமறை, தீர்த்த ப்ரசாத விநியோகம் |

மங்கள இசை : இராவத்தநல்லூர் நாதஸ்வர வித்வான், ஸ்ரீமான். **முருகன்** குழுவினர்

ஸ்ரீ விக்னேஷ் பிரிண்டர்ஸ் & ஸ்ரீ கார்ட்ஸ், கூடுவாஞ்சேரி. 98844 81561 / 71.

ஜயஜய ஸுதர்ஸந ! ஸ்ரீ: ஜயஜய ஸுதர்ஸந !





# ஸ்ரீசுயம்பு சக்கரத்தாழ்வார் – ஸ்ரீவிஜயவல்லி ஸமேத ஸ்ரீசக்ர ராஜஸ்வாமி திருக்கோயில்

எண்.21, இராவத்தநல்லூர், R.N.கண்டிகை அஞ்சல் - 603 403.

உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்.

# புன:ருத்தாரண மஹா ஸம்ப்ரோக்ஷண பத்திரிகை

நாள் : 01-03-2024, வெள்ளிக்கிழமை

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீவிஜயவல்லி ஸமேத ஸ்ரீசக்ரராஜபரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே பெருந்தேவி நாயிகா ஸமேத ஸ்ரீதேவாதி ராஜ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ஸ்ரீபூமி நீளா ஸமேத ஸ்ரீ லக்ஷ்மிந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம : ஸ்ரீ மதே நிகமாந்த மஹாகுரவே நம:

யதாயத்தம் சக்ரம் கால சக்ரம் சக்ரம் ச ஸாஸ்வதம் !
பாது வஸ் தத்பரம் சக்ரம் சக்ரரூபஸ்யசக்ரிண !
சக்ராங்குஸ பாஞ்சஜன்ய சார்ங்காயுத தராயச !
சக்ரராஜ ஸ்வரூபாய் பக்தி ஸாராயதே நமோ நம !!



புன்பல வழி யடைந்தரக்கிலச் சினை செய்து
நன்புல வழி திறந்து ஞான நற்சுடர் கொளீ.
என்பிலொள்கி நெஞ்சுருகியுள் கனிந் தெழுந்தோர்
அன்பிலன்றி யாழியானை யாவர் காணவல்லரே ?

# ஸ்ரீசக்ரத்தாழ்வார்
# புன:ருத்தாரண மஹா ஸம்ப்ரோக்ஷணம்

அன்புடையீர் !

முக்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சி என போற்றப்படும் காஞ்சீபுரம் மாநகருக்கு தெற்கேயும், சதுர்வேதமங்கலமாம் உத்திரமேரூர் பேரூருக்கு வடமேற்கே சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ளது. **இராவத்தநல்லூர் கிராமம்** மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களில் தொண்டை மண்டலத்தில் ஸ்ரீ சுதர்ஸனர் அம்சமாக **திருமழிசையாழ்வார்** அவதாரம் செய்து பல இடங்களில் யோக நிலையில் உள்ளார். அப்படிப்பட்ட திவ்யமான க்ஷேத்ரங்களில் இதுவும் ஒன்று அவருக்கு அனுக்ரஹம் செய்ய ஸ்ரீமத் நாராயணனே பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் **சுயம்புவாக ஸ்ரீசக்கரத்தாழ்வார்** என்னும் திருநாமத்துடன் யந்த்ர சிலா ரூபத்தில் எழுந்தருளி சேவை சாதிக்கின்றார். இப்புண்ணிய பூமியை ஸ்ரீமத் அஹோபிலமடம் 40, 41, 43ம் பட்டத்தின் ஸ்ரீமதழகிய சிங்கர்கள் எழுந்தருளி அனுக்ரஹித்துள்ளனர்.

ஸ்ரீசக்கரத்தாழ்வார் **அஷ்டாக்ஷர விமானத்தில்** ஸ்ரீ விஜயவல்லி சமேத ஸ்ரீ சக்ரராஜன், ஸ்ரீலக்ஷ்மி வராஹன், ஸ்ரீலக்ஷ்மி ந்ருஸிம்ஹன், ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவன் ஆகிய திவ்ய மங்கள சுதா பேரங்களும், முன் மண்டபத்தில் ஸ்ரீபெருந்தேவி ஸமேத ஸ்ரீ பேரருளாளனும் எழுந்தருளியுள்ளனர். கர்ப்பக்ருஹத்தில் சுமார் 360 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சுயம்பு மூர்த்தியான யந்த்ரரூப சிலா பேரத்திற்கும், ஸ்ரீசக்ரத்தாழ்வார் (மூலவர்) ஸ்ரீ விஜயவல்லி ஸமேத ஸ்ரீசக்ராஜ ஸ்வாமிக்கும் (உற்சவர்)

நாளது சோபகிருது வருஷம் **மாசி மாதம் 18ம் நாள் 01-03-2024 வெள்ளிக்கிழமை** சுவாதி நக்ஷத்ரம், கூடிய சுபதினம் காலை 7.30 மணிக்குமேல் 9.00 மணிக்குள் மீன லக்னத்தில் ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்மன் கிருபையாலும், ஸ்ரீஜயவீர அஞ்ஜனேயர், ஸ்ரீபக்த, பாகவத, ஆசார்ய பெருமக்களின் மனோபீஷ்டத்தாலும் **மஹாஸம்ரோக்ஷணம் (கும்பாபிஷேகம்-திருக்குட முழுக்கு விழா)** நடத்த நிச்சயிக்கப்பட்டுள்ளது. அனைவரும் தவறாமல் இவ்வைபவத்தில் பங்குகொண்டு ஸ்ரீ சக்ரத்தாழ்வாரின் பரிபூரண அனுக்ரஹத்திற்கு பாத்திரராக வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

இவ்வைபவத்தை ஸ்ரீ.உ.வே. சிறுங்கட்டூர், **ஸ்ரீதராச்சார் ஸ்வாமி** முன்னின்று நடத்தி வைக்கின்றார்.

அன்புடன்

**ஸ்ரீஸீதாராம சத்சங்கம் (ட்ரஸ்ட்)**
**ஸ்ரீகுருஸேவா ஸமிதி ஆஸ்ரம்**
(கிளைகள்)

இங்ஙனம்

**ஸ்ரீ சுயம்பு சக்ரத்தாழ்வார் திருகோயில்**
**மற்றும் கிராம பொதுமக்கள்**

எண்.21, இராவத்தநல்லூர் கிராமம், R.N.கண்டிகை அஞ்சல் - 603 403.
உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்.
தொடர்புக்கு : **99405 48119 / 94442 94783**

**குறிப்பு : ரூ. 500/- வழங்குபவர்களுக்கு கும்பாபிஷேக கலசம் வழங்கப்படும்.**